## வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## மானியக் கோரிக்கை எண். 10

## வணிகவரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு

# 2012-2013

**சி.வி. சண்முகம்,**
வணிகவரி மற்றும் பத்திரப் பதிவு,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை
அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2012

வணிகவரி மற்றும் பதிவுத்துறை

மானியக் கோரிக்கை எண். 10

வணிகவரிகள்

கொள்கை விளக்கக் குறிப்பு
2012-2013

# பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–2 |
| 2. | நிர்வாக அமைப்பு | 2–3 |
| | 2.1 வரிவிதிப்புப் பிரிவு | 4 |
| | 2.2 தணிக்கைப் பிரிவு | 4–5 |
| | 2.3 மேல்முறையீட்டுப் பிரிவு | 5–6 |
| | 2.4 செயலாக்கப் பிரிவு | 6–8 |
| 3. | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 8–9 |
| 4. | வணிகவரி பணியாளர் பயிற்சி மையம் | 10 |
| 5. | வணிகவரித் துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 11 |
| 6. | வரி வருவாய் | 12 |
| 7. | கடந்த ஆறு ஆண்டுகளில் சட்டவாரியான வரி வருவாய் | 13 |
| 8. | வரி நிர்வாகத்திற்கான செலவு | 13–14 |
| 9. | வரி/மாநில மொத்த உற்பத்தி உடனான (GSDP) வருவாய் வீதம் | 14–15 |
| 10. | வரி விலக்குகள், வரி சீர்திருத்தங்கள் மற்றும் சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள் | |
| | 10.1 வரி விலக்குகள் | 15–16 |
| | 10.2 வரி சீர்திருத்தங்கள் | 16–17 |
| | 10.2.1. ரூ.50 இலட்சம் வரை இணக்கவரி செலுத்தும் முறையில் சட்டப்பிரிவு 3 (4)–க்கு திருத்தம் | 17–18 |
| | 10.2.2. தெளிவுரை மற்றும் முன் தீர்வுமுடிவு வழங்கும் அதிகார அமைப்பினை நிறுவுதல் | 18–19 |
| | 10.2.3. சிறு வணிகர்களுக்கு உள்ளீட்டு வரி வரவினை பெறுவதற்கு வழிவகை செய்தல் | 19–20 |
| | 10.2.4. வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்ற முறையினை (Deemed Assessment) உருவாக்குவதற்கு 2006–ஆம் ஆண்டு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் பிரிவு 22(2)–குத் திருத்தம் | 20–21 |
| | 10.2.5. துணை வணிக வரி அலுவலர்களின் வரி விதிப்பு அதிகாரத்தினை உயர்த்துதல் | 21–22 |
| | 10.3 சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள் | |
| | 10.3.1. பெட்ரோலியப் பொருட்களுக்கு கடப்புச் சீட்டினை பெறுவதற்கான நிபந்தனை | 22–23 |
| | 10.3.2. தாவர எண்ணெய்கள் மீதான நிபந்தனைக்குட்பட்ட விற்பனைத் தொகை வரம்பினை நீக்குதல் | 23–25 |
| 11. | தமிழ்நாடு வணிகர் நல வாரியம் | 25–26 |
| 12. | சமாதானத் திட்டம் | 26 |
| 13. | சரக்கு மற்றும் சேவை வரி | 27–29 |
| 14. | மதிப்புக் கூட்டுவரி அறிமுகம் மற்றும் மத்திய விற்பனை வரி வீதத்தில் குறைப்பு காரணமாக வருவாய் இழப்பீடு | 29–33 |
| 15. | தகவல் தொழில்நுட்பம் | 33–36 |
| | (அ) முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் | 36–39 |
| | (ஆ) மின்னணு வழி வரி செலுத்துதல் (e-Payment) | 39–40 |
| 16. | சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 40–42 |
| 17. | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 | 42–43 |
| 18. | 2012–2013–ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டம் | 43–44 |

## முன்னுரை

தொலைநோக்குச் சிந்தனையுடன் செயல்படும் தமிழ்நாடு, பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்திட்டங்களில் பல, பிற மாநில அரசுகளாலும் மத்திய அரசாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. மாநிலத்தின் முதன்மை நிலையினைத் தக்க வைத்துக் கொள்ளவும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முயலும் நல்லதொரு ஆட்சியினை ஏற்படுத்தும் பொருட்டும், அடுத்து வரும் பத்து நிதியாண்டுகளில் மாநிலத்தை மேம்படுத்துவதற்கான திறன்மிக்க திட்டத்திற்காக, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களது வழிகாட்டுதலின்படி **'தொலைநோக்குத் திட்டம் 2023'** என்ற ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கிய துறைகளில் ஒன்றான வணிகவரித்துறை, இந்த தொலைநோக்குத் திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுவதில் தனக்குள்ள முக்கிய பொறுப்பினை முழுவதுமாக உணர்ந்துள்ளது.

2011–2012–ஆம் நிதியாண்டில் பொதுவாக பொருளாதார மந்த நிலை நிலவிய போதிலும், வணிகவரித் துறையானது தனது மொத்த வருவாயாக ₹ 39,544.73 கோடி வசூலித்து, சென்ற ஆண்டை விட 27.09 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. இதே போன்ற வளர்ச்சி வீதத்தை இந்நிதியாண்டிலும் தொடர துறை முயற்சி செய்யும் அதே சமயம், ஒரு சிறந்த வரி நிர்வாகத்தின் செயலானது வருவாயை பெருக்குவதில் மட்டும் கவனம் செலுத்தாமல், வரி ஏய்ப்பினை குறைத்திடுவது மற்றும் நுகர்வோரின் (இத்துறையைப் பொருத்தவரை வணிகப் பெருமக்கள்) திருப்தியினை அதிகரித்திட வேண்டும் என்பதையும் துறை தொடர்ந்து கருத்தில் கொள்ளும். 'Improving Tax Administration in Developing Countries' என்ற படைப்பில் பெர்ட் (Bird) மற்றும் ஜான்ச்செர் (Jantscher) குறிப்பிட்டதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்: 'அதிக வருவாயை வசூலிப்பது மட்டும் ஒரு சிறந்த வரி நிர்வாகமாகாது. அந்த வருவாய் எவ்வாறு ஈட்டப்பட்டது ... சமன்பாட்டில் அதன் தாக்கம் ... மற்றும் ... பொருளாதார நலனும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்' எனக் குறிப்பிடுகின்றனர்.

## 2. நிர்வாக அமைப்பு

துறைத் தலைமை அலுவலரான வணிகவரி ஆணையரின் அலுவலகம் சென்னை எழிலகம் கட்டட வளாகத்தில் அமைந்துள்ளது. ஆணையரின் அலுவலகப் பணிகளை நிறைவேற்றுவதில் கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு) அவர்கள் சட்டத் திருத்தங்கள், வரி வீதம் தொடர்பான தெளிவுரைகள், வரித் தள்ளுபடி, வரி விலக்குகள் போன்ற பணிகளையும், கூடுதல் ஆணையர் (சீராய்வு மனு) அவர்கள் நீதிமன்ற வழக்குகள், தீர்ப்பாயம் மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை ஆய்வு செய்தல், சீராய்வு மனுக்களை முடிவு செய்தல் போன்ற பணிகளையும், கூடுதல் ஆணையர் (சுய சீராய்வு) அவர்கள் வரித்தள்ளுபடி

திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 16-D-யின் கீழ் வரும் வரித் தள்ளுபடி நேர்வுகள் குறித்த பணிகளையும், கூடுதல் ஆணையர் (மதிப்புக்கூட்டு வரி) அவர்கள் மத்திய விற்பனை வரி / மதிப்புக்கூட்டு வரி இழப்பீட்டுத்தொகை பெறுவதைக் கண்காணித்தல், சரக்கு மற்றும் சேவை வரி குறித்த பணிகளையும், கூடுதல் ஆணையர் (துணிக்கை) அவர்கள் வருவாய் வசூலினைக் கண்காணித்தல், மாநில கணக்காயரால் எழுப்பப்படும் தணிக்கைக் குறிப்புகள், பொதுக் கணக்குக் குழு கூட்டங்கள் போன்ற பொருண்மைகளில் உதவி புரிந்து வருகின்றனர். இத்துறையானது மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் அதன் அலுவலகங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. “பார்த்தசாரதி ஷோம்’’ என்பவரால் எழுதப்பட்ட ‘Tax Shastra – Administrative Reforms in India, United Kingdom and Brazil’ என்ற புத்தகத்தில், வரி செலுத்துவோர்கள் அல்லது நுகர்வோர்களை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் நவீன வரி நிர்வாகமானது, அதன் துறையை நன்கு செயல்படும் விதத்தில் வடிவமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். வணிகவரித்துறை அலுவலகங்கள் அதன் செயல்பாட்டிற்கேற்ப நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு மேற்சொன்ன கொள்கைக்கு இசைவாக செயல்பட்டு வருகிறது. இந்த நான்கு பிரிவுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :



## 2.1 வரிவிதிப்புப் பிரிவு

இப்பிரிவின் 319 வரிவிதிப்பு வட்டங்கள், பதிவு பெற்ற வணிகர்களுக்கும் துறைக்கும் இடையேயான முக்கிய தொடர்பாக விளங்குகின்றன. பெறக்கூடிய வரியின் அளவு, வணிகர்களின் எண்ணிக்கை, வணிக செயல்பாடுகளின் தன்மை ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில், இந்த வரிவிதிப்பு வட்டங்கள் துணை ஆணையர் / உதவி ஆணையர் / வணிகவரி அலுவலர் ஆகியோரின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. இவ்வரிவிதிப்பு அலுவலர்கள் மாவட்ட / சரக அளவில் வரிவிதிப்பு துணை ஆணையர்கள் (40 அலுவலர்கள்) கட்டுப்பாட்டிலும், கோட்ட அளவில் இணை ஆணையர்கள் (10 அலுவலர்கள்) கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் உள்ளனர். மேற்குறிப்பிட்ட வரிவிதிப்பு வட்டங்களைத் தவிர, சென்னையில் உள்ள பெருமளவில் வரி செலுத்துவோருக்கென (100 அதிக வரி செலுத்துவோர்) இணை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் நான்கு துணை ஆணையர்கள் வரிவிதிப்பு மற்றும் பிற சட்டரீதியானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 2.2 தணிக்கைப் பிரிவு

வரி ஈட்டும் துறையில் முறையான தணிக்கையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்த வேண்டியதன் அவசியமில்லை. நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் வழிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்கு தணிக்கை மிகவும் அவசியமாகிறது. இதற்கென, ஒவ்வொரு வணிகவரி மாவட்டம்/ சரகத்திலும் ஒரு உதவி ஆணையர் மற்றும் ஒரு வணிகவரி அலுவலர்

கொண்ட உட்தணிக்கைக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு இணை ஆணையர்களால் வகுக்கப்படும் தணிக்கை நிரல்படி இந்த உட்தணிக்கைக் குழுக்கள் காலாண்டுத் தணிக்கையினை மேற்கொள்கின்றன. மேலும், காலமுறைப்படி மாநிலக் கணக்காயரால் வரிவிதிப்புகள் தொடர்பாக தனியே தணிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

## 2.3 மேல்முறையீட்டுப் பிரிவு

அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டுத் துணை ஆணையர் / இணை ஆணையர் முதல் மேல்முறையீட்டு அலுவலர் ஆவார். மாநிலம் முழுவதிலும் 20 மேல்முறையீட்டுத் துணை ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் உள்ளனர். மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு இணை ஆணையர்கள் முன் நடத்தப்படும் வழக்குகளில், துறையின் சார்பாக உதவி ஆணையர் பணித்தரத்தில் உள்ள ஒரு துறைப் பிரதிநிதி வாதிடுவார். இந்த முதல் மேல்முறையீட்டு அலுவலரால் வழங்கப்படும் ஆணைக்கு எதிராக சென்னையிலுள்ள விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மைத் தீர்ப்பாயத்திலும் மற்றும் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள கூடுதல் தீர்ப்பாயங்களிலும் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம். இணை ஆணையர் பணித்தரத்திலுள்ள ஒரு மாநிலப் பிரதிநிதி சென்னையில் உள்ள முதன்மைத் தீர்ப்பாயத்திலும், துணை ஆணையர் பணித்தரத்தில் உள்ள கூடுதல் மாநில பிரதிநிதி கூடுதல் தீர்ப்பாயங்களிலும் துறை சார்ந்த வழக்குகளில் வாதிடுவார்கள்.



## 2.4 செயலாக்கப் பிரிவு

மாநிலத்திலுள்ள 8 செயலாக்கக் கோட்டங்களும் மற்றும் இடைமாநிலப் புலனாய்வுக் குழு ஒன்றும், இணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. செயலாக்கப் பணியினை மேற்பார்வையிடுவதில் ஒவ்வொரு இணை ஆணையருக்கும் குறைந்த பட்சம் ஒரு துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் உதவி புரிவர். பொதுவாக, போக்குவரத்து வாகனங்களின் சோதனை மற்றும் வணிக இடங்களில் சோதனை/தணிக்கை மேற்கொண்டு வரி ஏய்ப்பினைக் கண்டறிவது செயலாக்கப்பிரிவின் பணியாகும். மாநிலங்களுக்கிடையேயான சரக்குப் போக்குவரத்து வாகனங்களைக் கண்காணிக்கும் பொருட்டு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லைகளில் 28 எல்லையோர சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு, அவை 24 மணி நேரமும் முறைப்பணி அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், சென்னை விமான நிலைய சரக்கு வளாகம், சென்னை துறைமுகம், சென்னை கன்கார் முனையம், ராயபுரம் சரக்கு வளாகம், சென்ட்ரல் பார்சல் அலுவலகம் (சென்னை), எழும்பூர் சரக்கு வளாகம், சால்ட் கோட்டர்ஸ் (சென்னை) மற்றும் தூத்துக்குடி துறைமுகம் ஆகிய 8 இடங்களில் சோதனை முனையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், சென்னை விமான சரக்கு வளாகத்தில் உள்ள சோதனை முனையமானது, இறக்குமதி கொள்முதல்கள்

கணக்கில் காட்டப்படாமல் மறைமுகமாக வெளியே கொண்டு செல்லப்படும் காரணத்தால், அண்மையில் ஏற்படுத்தப்பட்டது. 2011-2012-ஆம் ஆண்டிற்கான வணிகவரித்துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவித்தவாறு 27 சோதனைச் சாவடிகள் [உள் (போக்குவரத்து) துறையால் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ள காரணத்தால், புழல் (உள்) சோதனைச் சாவடி நீங்கலாக] மற்றும் 8 சோதனை முனையங்களை ₹ 28.95 கோடி தொடரா செலவினத்திலும் ஆண்டொன்றுக்கு ₹ 4.41 கோடி தொடர் செலவினத்திலும் நவீனமயமாக்கக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கிடையேயான வாகனப் போக்குவரத்து கண்காணிக்கப்படும் இடங்களில் சோதனைச் சாவடிகள் நிலையாக அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்திற்குள் கொண்டு செல்லப்படும் பொருட்களை கண்காணிப்பதற்கென மாநிலம் முழுவதும் 55 சுற்றும்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சுற்றும்படைகளுக்கு, பொருட்களை கொண்டு செல்லும் வணிகருடைய விவரங்கள் மற்றும் வரி செலுத்திய விவரங்களை அறியும் பொருட்டு கையடக்கக் கருவிகள் போன்ற நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு, வணிகம் நடைபெறும் இடங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ள ஒவ்வொரு செயலாக்கத் துணை ஆணையரின் கீழ் குழுக்கள் உள்ளன. இக்குழு அலுவலர்கள், வணிகர்களுக்கு முன்கூட்டியே தகவல் அளித்து



அவர்கள் வணிகம் செய்யும் இடங்களில் ஆண்டுத் தணிக்கையும் மேற்கொள்வர்.

இணை ஆணையர் தலைமையிலான இடைமாநிலப் புலனாய்வுக் குழுவானது, மாநிலங்களுக்கு இடையேயான வணிகப் பரிவர்த்தனைகளில் வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கான மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்காக விவரங்களைப் பரிமாற்றம் செய்துகொள்கிறது.

## 3. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

எந்த ஒரு வரி நிர்வாகக் கொள்கையினை உருவாக்குவதற்கும், செயல்படுத்துவதற்கும் பகுப்பாய்வு முறைகள் முக்கிய பங்காற்றுகின்றன. குறிப்பிட்ட வரி நிர்வாக உத்திகளை உருவாக்குவதற்கும் மற்றும் கொள்கைகளை சிறப்புற செயல்படுத்துவதற்கும் துறையால் பெறப்படும் கணிசமான தகவல்களை பகுப்பாய்வு செய்தல் அவசியமாகிறது. இதன் பொருட்டு, புள்ளியியல் துறை இணை இயக்குநர் தலைமையிலான புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு ஒன்று வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டுவருகிறது. கள அலுவலகங்களிலிருந்து சரியான புள்ளி விவரங்கள் பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு வணிகவரி கோட்ட அளவில் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் ஒருவரும், வணிகவரி மாவட்ட அளவில் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் பணிபுரிந்து வருகின்றனர்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு கீழ்க்கண்ட அறிக்கைகளை காலமுறையாக வெளியிடுகிறது:-

(i) “வணிகவரித்துறை – ஒரு கண்ணோட்டம்” – ஆண்டுதோறும்

(ii) வணிகவரித்துறை – முக்கிய குறியீடுகள் – ஆண்டுதோறும்

(iii) வணிகவரித்துறையின் புள்ளி விவரத் தொகுப்பு – காலமுறை அறிக்கை – ஆண்டுதோறும்

(iv) அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்

(v) அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்

(vi) சட்டவாரியான மற்றும் கோட்டவாரியான வருவாய் அறிக்கை – மாதந்தோறும்

(vii) கோட்டங்களின் செயல்பாடு குறித்த அறிக்கை – மாதந்தோறும்

(viii) வரி ஏய்ப்பிற்குட்பட்ட பொருட்கள் குறித்த அறிக்கை – தேவைக்கேற்ப

(ix) பொருட்களின் விலை மீது மதிப்புக் கூட்டு வரி ஏற்படுத்தும் தாக்கத்தை கண்காணித்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல் – மாதந்தோறும்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, தேவை ஏற்படும்போது வரி ஏய்ப்பினை மதிப்பிடுவதற்காக, பொருட்கள் சார்ந்த ஆய்வுகளையும் மேற்கொள்கிறது.



## 4. வணிகவரி பணியாளர் பயிற்சி மையம்

வரி விதிப்பு முறைகளிலும் வரிக்கட்டமைப்புகளிலும் ஏற்படும் மாற்றங்களை துறையின் அலுவலர்கள் உடனுக்குடன் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். மேலும், மதிப்புக் கூட்டு வரி அறிமுகம், சரக்கு மற்றும் சேவை வரி (அறிமுகப்படுத்தப்படும்பட்சத்தில்), துறையின் செயல்முறைகளில் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்திருப்பது போன்றவை துறையின் அலுவலர்களை தொடர்ந்து பயிற்றுவித்து அவர்களது அறிவுத் திறனை மேம்படுத்துவதை முக்கியமானதொன்றாக்குகிறது. துறையின் அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் தேவையை நிறைவேற்றும் வகையில், இணை ஆணையர் (வணிகவரி) பணித்தரத்தில் இயக்குநர் ஒருவர் தலைமையில், வணிகவரி அலுவலர் பயிற்சி நிலையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. வணிகவரித் துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் மற்றும் அவை தொடர்பான விதிகள் குறித்து அமைச்சுப் பணியாளர் முதல் மாநிலப் பணித்தரத்தில் உள்ள அலுவலர்கள் வரை அனைவருக்கும் இப்பயிற்சி நிலையம் “பணியிடை பயிற்சி” மற்றும் “புத்தாக்கப் பயிற்சி” ஆகிய பயிற்சிகளை அளிக்கிறது. மேலும், செயலாக்கம் மற்றும் வரிவிதிப்பு அலுவலர்களுக்கு வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்டங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 5. நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பின்வரும் சட்டங்கள் வணிகவரித்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன:

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1.1.2007 முதல்)
2. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31.12.2006 வரை)
4. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31.12.2006 வரை)
5. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
6. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
9. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001

   (சென்னை உயர்நீதிமன்றம் தனது 23.3.2007 நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது – இந்த ஆணை மீதான மேல்முறையீடு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது)

10. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983



## 6. வரி வருவாய்

வணிகவரித்துறை மூலம் நிர்வகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் கீழ் கடந்த ஆறு ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் மற்றும் வளர்ச்சி வீத விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| 2006-2007 | 19,217 | 15.66% |
| 2007-2008 | 19,952 | 03.83% |
| 2008-2009 | 22,570 | 13.12% |
| 2009-2010 | 24,819 | 09.96% |
| 2010-2011 | 31,117 | 25.37% |
| 2011-2012 | 39,545 | 27.09% |

12.7.2011 முதல் குறைந்தபட்ச மதிப்புக் கூட்டுவரி வீதத்தை 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்தியது, அதிகபட்ச மதிப்புக்கூட்டு வரிவீதத்தை 12.5 சதவீதத்திலிருந்து 14.5 சதவீதமாக உயர்த்தியது, புகையிலை, புகையிலைப் பொருட்கள் மற்றும் தாவர எண்ணெய் போன்றவற்றின் மீதான வரிவீதத்தை மாற்றியமைத்தது போன்ற வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டதன் காரணமாக மந்தமான பொருளாதார வளர்ச்சி நிலவிய சூழலிலும், கடந்த 2011–2012–ஆம் நிதியாண்டில் வணிகவரித்துறையின் வரி வருவாய் ஆரோக்கியமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

## 7. கடந்த ஆறு ஆண்டுகளில் சட்டவாரியான வரி வருவாய்

துறை நிர்வகித்து வரும் முக்கியச் சட்டங்களின் கீழான வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| சட்டம் | 2006–2007 | 2007–2008 | 2008–2009 | 2009–2010 | 2010–2011 | 2011–2012 |
|---|---|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் | 2,290 | 16,472 | 19,440 | 21,477 | 26,558 | 33,997 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 2,033 | 1,744 | 1,653 | 1,773 | 2,263 | 2,819 |
| 3. தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 13,416 | 429 | 293 | 218 | 350 | 259 |
| 4.கேளிக்கைகள் வரிச் சட்டம் | 25 | 16 | 12 | 13 | 16 | 59 |
| 5. பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 6 | 7 | 6 | 7 |
| 6. ஆடம்பர வரிச் சட்டம் | 128 | 160 | 170 | 169 | 216 | 256 |
| 7. நுழைவு வரிச்சட்டம் (வாகனம் மற்றும் சரக்குகள்) | 1,319 | 1,125 | 996 | 1,162 | 1,708 | 2,148 |
| **மொத்தம்** | **19,217** | **19,952** | **22,570** | **24,819** | **31,117** | **39,545** |

## 8. வரி நிர்வாகத்திற்கான செலவு

வணிகவரித்துறையின் வருவாய் மற்றும் நிர்வாகச் செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. வருவாயுடனான துறையின்



செலவு விகிதத்தைவிட துறையின் வரி வருவாய் வளர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளதால், 2011–2012–ஆம் நிதியாண்டில் வருவாயுடனான செலவு விகிதம் குறைந்துள்ளது.

(ரூபாய் கோடியில்)

| தலைப்பு | 2007–2008 | 2008–2009 | 2009–2010 | 2010–2011 | 2011–2012 |
|---|---|---|---|---|---|
| 1. வருவாய் | 19,952 | 22,570 | 24,819 | 31,117 | 39,545 |
| 2. செலவுகள் | 143.73 | 187. 27 | 205.10 | 196.45 | 224.05 |
| 3. வரி வருவாயில் செலவின் விழுக்காடு | 0.72% | 0.83% | 0.83% | 0.63% | 0.57% |

## 9. வரி / மாநில மொத்த உற்பத்தியுடனான (GSDP) வருவாய் விகிதம்

தற்போது நடைமுறையில் உள்ள மதிப்புக்கூட்டுவரி / மதிப்புக்கூட்டுவரியல்லாத வரிவீதங்களைக் கருத்திற்கொண்டு நோக்கும் போது மாநில மொத்த உற்பத்தியுடன் (GSDP) வருவாய் வசூலினை ஒப்பிடுவது துறையின் வரி வசூல் திறனைக் காட்டும் ஒரு குறியீடாகும். மாநிலத்தின் மொத்த உற்பத்தியுடன் வணிகவரித்துறையின் மொத்த வருவாய் ஒப்பீடு செய்யப்பட்டு, அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் துறையின் வரி வருவாய் பங்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு 12.7.2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட வரிவீத உயர்வு ஒரு

காரணமாகும். மேலும், வரி ஏய்ப்பினை துறையால் ஓரளவிற்கு தடுக்க முடிந்ததும் ஒரு காரணமாகும்.

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மொத்த வணிகவரி வசூல் | மாநிலத்தின் மொத்த உற்பத்தி | சதவீதம் [(2)/(3) x 100] |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2006-2007 | 19,217 | 3,10,526 | 6.18% |
| 2007-2008 | 19,952 | 3,50,819 | 5.68% |
| 2008-2009 | 22,570 | 4,01,336 | 5.62% |
| 2009-2010 | 24,819 | 4,73,519 | 5.24% |
| 2010-2011 | 31,117 | 5,18,576 | 6.00% |
| 2011-2012 | 39,545 | 5,81,635 (திருத்திய மதிப்பீடு) | 6.79% |

## 10.0 வரி விலக்குகள், வரி சீர்திருத்தங்கள் மற்றும் சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள்:

### 10.1 வரி விலக்குகள்

வணிகம் மற்றும் தொழில் பிரிவினரின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெறுவதற்கு மாநிலத்திலுள்ள பல்வேறு சங்கங்களுடன் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு முந்தைய கூட்டம் ஒன்று அமைச்சர் (நிதி) மற்றும் அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) ஆகியோரால் 22.03.2012 அன்று நடத்தப்பட்டது. அக்கூட்டத்திலும் பிற நேர்வுகளிலும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட வரி விலக்குகள் மற்றும் வரிக்குறைப்புகள் அறிவிக்கப்பட்டு, 2012–ஆம் ஆண்டு



ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாள் முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன:

**(அ) வரிவிலக்களிக்கப்பட்ட இனங்கள்:**

- கோதுமை
- ஓட்ஸ்
- அனைத்து வகையான இன்சுலின் மருந்துகள்
- கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகள்
- பாலூட்டும் புட்டிகள் மற்றும் பாலூட்டும் காம்புகள்
- தலைக்கவசம்

**(ஆ) வரிவீதம் 14.5 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ள இனங்கள்:**

- மின் சக்தியால் இயங்கக்கூடிய இரு சக்கர வாகனங்கள் (E-bikes)
- தீக்குச்சி தயாரிப்பதற்கான மரக் குச்சிகள் மற்றும் மரப்பட்டைகள்
- சானிடரி நேப்கின்கள் மற்றும் டயாபர்கள்
- காம்பேக்ட் ப்ளோரசண்ட் விளக்குகள் மற்றும் காம்பேக்ட் ப்ளோரசண்ட் குழல் விளக்குகள்

### 10.2 வரி சீர்திருத்தங்கள்

வணிகப் பெருமக்களுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கலந்தாய்வுகளில் 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் முரண்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. அவைகளைக் களைவதற்கு

கடந்த சில மாதங்களில் கீழ்க்கண்ட சட்டத்திருத்தங்களை அரசு மேற்கொண்டுள்ளது:

### 10.2.1. ரூ.50 இலட்சம் வரை இணக்க வரி செலுத்தும் முறை தொடர்பான சட்டப்பிரிவு 3(4)–க்கு திருத்தம்

2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் பிரிவு 3–ன் உட்பிரிவு 4–ல் கூறு (b)–ன்படி, இணக்க வரி (0.5 சதவீதத்தில்) செலுத்த விருப்பம் தெரிவித்துள்ள வணிகர், வரி செலுத்தத்தக்க பொருட்களின் விற்பனைத்தொகை அவ்வாண்டில் எப்பொழுது ஐம்பது இலட்சம் ரூபாயை எட்டுகிறாரோ, அப்போது அவ்வணிகர் ஐம்பது இலட்சம் ரூபாய் வரையிலும் மற்றும் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தன்னுடைய அனைத்து விற்பனையின் மீதும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வரிவீதங்களின்படி வரி செலுத்த கடப்பாடுடையவராவார். இது வணிகருக்கு சுமை ஏற்பட வழி செய்தது. ஏனெனில், ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு கீழான வரிசெலுத்தத்தக்க பொருட்களின் விற்பனைத்தொகை மீது வணிகர் வரி ஏதும் வசூலிக்காவிட்டாலும், அத்தகைய விற்பனைத்தொகை மீதும் அவர் வரி செலுத்த வேண்டி இருந்தது.

இந்த முரண்பாட்டினை சரிசெய்யும் பொருட்டு, இணக்கவரி திட்டத்தின் கீழ் வரி செலுத்தும் வணிகரின் வரி விதிக்கத்தக்க பொருட்கள் தொடர்பான விற்பனைத்தொகையானது அவ்வாண்டில் எப்பொழுது ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எட்டுகிறதோ, அத்தகைய வணிகர் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வரிச் செலுத்தத்தக்க தன்னுடைய அனைத்து விற்பனையின் மீது மட்டும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வரிவீதங்களின்படி வரி செலுத்த கடப்பாடு உடையவராவார் என்ற வகையில் 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் பிரிவு 3–ன் உட்பிரிவு 4–க்கு சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இது 2012–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

### 10.2.2. தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை நிறுவுதல்

1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வரிவீதம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வணிகருக்கு தெளிவுரை வழங்கும் அதிகாரம் வணிகவரி ஆணையருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் கீழ் அத்தகைய தெளிவுரை வழங்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. இத்தகைய முன்தீர்வு முடிவு வழங்குவதில் (மத்திய அரசின் வருமான வரி மற்றும் கலால் துறைகளில் நடைமுறைகளில் உள்ளவாறு) உள்ள நன்மைகளைக் கருத்தில் கொண்டு, பதிவு செய்யப்பட்ட வணிகர் ஒருவரால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரில், வரிவீதம் தொடர்பான கூறு எதனையும் தெளிவாக்குவதற்கு வணிகவரி ஆணையர், கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு)

மற்றும் கூடுதல் ஆணையர் (சீராய்வு மனு) ஆகியோரை உள்ளடக்கிய, தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்குவதற்கான மாநில அளவிலான அதிகார அமைப்பு ஒன்றினை அரசு நிறுவியுள்ளது. இவ்வதிகார அமைப்பு 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது.

### 10.2.3. சிறு வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினை பெறுவதற்கு வழிவகை செய்தல்

2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் 41–ஆம் பிரிவின்படி, வணிகர் ஒருவர் (அந்நிதியாண்டில் அவருடைய விற்பனைத்தொகை உச்சவரம்பு பொதுவாக ரூபாய் ஐந்து இலட்சம் மற்றும் உள்ளூர் விற்பனையில் ஈடுபடும் வணிகர்களைப் பொறுத்தவரை ரூபாய் பத்து இலட்சத்தினைக் கடக்கும் என எதிர்பார்த்து) வரி என்ற வகையில் தொகை ஏதும் வசூலித்திருந்தால், அந்த ஆண்டு அவரது விற்பனைத்தொகை குறித்துரைக்கப்பட்ட வரிவிதிப்பு வரம்பிற்குக் குறைவாக இருக்கும்பட்சத்தில், அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையினை அரசுக்குச் செலுத்தி அதை முழுமையாக இழக்க நேரிடும் என இதற்கு முன்னர் நடைமுறையில் இருந்தது. சிறு வணிகர்களுக்கு பயனளிக்கும் வகையில், எந்த ஒரு நபராலும் அல்லது பதிவு பெற்ற வணிகராலும் வரி என்ற வகையில் தொகை ஏதும் வசூலித்திருந்தால், அந்த ஆண்டு அவரது விற்பனைத்தொகை குறித்துரைக்கப்பட்ட வரிவிதிப்பு வரம்பிற்குக் குறைவாக இருக்கும்பட்சத்தில், அவ்வாண்டிற்கான நேரிணையான



கொள்முதல் மீதான தகுந்த உள்ளீட்டு வரி வரவு ஏதுமிருப்பின் அதனைக் கழித்துக் கொண்டு மீதமுள்ள தொகையினை மட்டும் அரசுக்கு இழக்க நேரிடும் என்ற வகையில் 41–ஆம் பிரிவுக்கு சட்டத்திருத்தம் அரசால் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத் திருத்தம் 2012–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

### 10.2.4. வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்ற முறையினை (Deemed Assessment) உருவாக்குவதற்கு 2006–ஆம் ஆண்டு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் பிரிவு 22 (2)–க்கு திருத்தம்

2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டம் பிரிவு 22–ன் உட்பிரிவு 2–ன்படி, வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது வணிகரால் அந்த ஆண்டுக்கென சமர்ப்பிக்கப்படும் நமூனாக்கள், வரி செலுத்தியதற்கான சான்று மற்றும் வகுத்துரைக்கப்பட்ட சான்றாவணங்களுடன் இணைக்கப்பட்டிருக்குமானால், அந்த நமூனாக்களை ஏற்றுக்கொண்டு வரிக்கணிப்பு அதிகார அமைப்பானது வரிக்கணிப்பு ஆணை ஒன்றினை தற்போது பிறப்பிக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் கட்டாயமான வரிக்கணிப்பு இருக்காது என்ற மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் பொதுவான கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு, வணிகவரித்துறையானது, வரிக்கணிப்பு அதிகார அமைப்பினால் வரிக்கணிப்பு ஆணை ஒன்றினைப் பிறப்பிக்க தற்போது இருந்து வரும் நடைமுறையைத்

தவிர்த்துவிடுவதென முடிவு செய்துள்ளது. இதற்குப் பதிலாக வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்ற முறையை (Deemed Assessment) கொணர முடிவு செய்துள்ளது. இது தொடர்பான அரசின் நோக்கமானது 2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிப்பாக செய்யப்பட்டது. அதற்கிணங்க, சட்டத்துறையுடன் கலந்தாலோசித்து ஒரு வரைவு சட்டமுன்வடிவு தயார் செய்யப்பட்டுள்ளது. இது நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது நடைமுறைக்கு கொண்டு வரப்படும் போது, துறையுடன் வணிகப் பெருமக்களுக்கான தொடர்பானது, எளிமையானதாகவும் வெளிப்படையானதாகவும் அமைய வழிவகை செய்யும். அதே சமயம், வரி ஏய்ப்பு செய்ய எண்ணுபவர்களால் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும் முறையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, வணிகரால் சமர்ப்பிக்கப்பட்ட நமூனாக்களில் நூற்றுக்கு இருபது சதவீதத்திற்கு மிகாத அளவில் சிலவற்றை மட்டும் வணிகவரி ஆணையரால் தெரிவு செய்து அவற்றின் சரியான தன்மையை கூர்ந்தாய்வு செய்யும் தற்போதுள்ள முறையானது தொடரும்.

### 10.2.5. துணை வணிக வரி அலுவலர்களின் வரிவிதிப்பு அதிகாரத்தினை உயர்த்துதல்

துணை வணிகவரி அலுவலர்களின் (முன்னாளில் உதவி வணிகவரி அலுவலர்கள்) வரிவிதிப்பு அதிகாரம் கடைசியாக 2002–ஆம்



ஆண்டில் சீரமைக்கப்பட்டது. பல வருடங்களாக இவ்வரிவிதிப்பு அதிகாரம் சீரமைக்கப்படாததால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டு வந்தன. இதனால், துறையின் 2011–12–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பு அதிகார வரம்பான மொத்த விற்பனைத் தொகையான ஆண்டொன்றுக்கு ரூபாய் இருபது இலட்சம் மற்றும் மொத்த வரித்தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் முப்பதாயிரம் என்பதற்குப் பதிலாக, ஆண்டு மொத்த விற்பனைத்தொகை (வரிவிலக்களிக்கப்பட்ட இனங்கள் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழான விற்பனைத் தொகை உட்பட) ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்திற்கு மிகாமல், ஆனால் ஆண்டு மொத்த வரித்தொகை ரூபாய் எழுபத்தைந்தாயிரத்திற்கு உட்பட்டு இருக்கும் வகையில் மாற்றி சீரமைக்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது. இது 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5–ஆம் நாள் முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## 10.3 சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள்

### 10.3.1. பெட்ரோலியப் பொருட்களுக்கு கடப்புச்சீட்டினை பெறுவதற்கான நிபந்தனை

எண்ணெய் நிறுவனங்களால் புதுச்சேரி மாநிலத்தில் விற்பதற்கென இரசீதிடப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், தமிழ்நாட்டிலேயே விற்கப்படுகிறது என அறியப்பட்டது.

மாநிலங்களுக்கிடையேயான விற்பனைக்குரிய பெட்ரோலியப் பொருட்கள் இவ்வாறு கணக்கின்றி உள்ளூர் பகுதியில் விற்கப்படுவதால் மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய வரி வருவாயில் பெருமளவு இழப்பு ஏற்பட்டு வந்தது. இது குறித்து மாநில கணக்காயரும் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இத்தகைய வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் ஆறாவது அட்டவணையில், சேர்க்கைகள் உள்ள பெட்ரோல் அல்லது சேர்க்கைகள் அல்லாத பெட்ரோல், உயர்வேக டீசல் எண்ணெய் மற்றும் இலகுரக டீசல் எண்ணெய் ஆகியன அரசால் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலங்களுக்கு இடையேயான இத்தகைய பெட்ரோலியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு கடப்புச்சீட்டு பெறும் முறை அரசால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்நிபந்தனை, 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1–ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

### 10.3.2. தாவர எண்ணெய்கள் மீதான நிபந்தனைக்குட்பட்ட விற்பனைத் தொகை வரம்பினை நீக்குதல்

2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் தாவர எண்ணெய்கள் மீது 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது. எனினும், கடந்த 11.07.2011 முடிய தாவர எண்ணெய்களின் மொத்த விற்பனைத் தொகையானது ஒரு வருடத்திற்கு ₹ 500 கோடிக்கு மிகாமல் வணிகம் செய்யும் வணிகருக்கு மதிப்புக்கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.



இவ்வரிவிலக்கானது நிபந்தனைக்குட்பட்டது. மேலும், இவ்வரிவிலக்கானது 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்திற்கு மட்டுமே பொருந்தக் கூடியது. ஆகையால், 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், விற்பனைத்தொகை வரம்பின்றி, தாவர எண்ணெய்கள் மீதான மாநிலங்களுக்கிடையேயான விற்பனைக்கு வரி செலுத்த வேண்டும். 2010–11–ஆம் வரிவிதிப்பாண்டு முடிய 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆண்டொன்றுக்கான விற்பனைத் தொகை வரம்பான ₹ 500 கோடியை தமிழ்நாட்டிலுள்ள வணிகர் எவரும் எட்டாததால், அச்சட்டத்தின் கீழ் அந்த வருடத்தின் போது தாவர எண்ணெய் மீது வரி ஏதும் வசூலிக்கப்படவில்லை. அரசின் பல்வேறு புதுமையான மக்கள் நல மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஆதாரம் திரட்டுவதற்கு ஏதுவாக, அரசின் வருவாயைப் பெருக்க நடவடிக்கைகள் கருதப்பட்ட போது, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் கீழ் தாவர எண்ணெய்கள் மீதான விற்பனைத் தொகை வரம்பு ₹ 500 கோடி என்பதனை ₹ 5 கோடி என குறைத்திட முடிவு செய்யப்பட்டு, 12.7.2011 முதல் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்நடவடிக்கையின் தாக்கத்தினை ஆராயும் போது, இதன் மூலம் ஈட்டக்கூடிய வருவாயானது எதிர்பார்த்த அளவைவிட குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. ஏனெனில், சில நியாயமற்ற வணிகர்கள் ஒரே நேரத்தில் பல்வேறு பதிவுச் சான்றிதழ்களைப் பெறுவது மற்றும்

வேண்டுமென்றே அவருடைய விற்பனைத் தொகையினை ₹ 5 கோடிக்குக் குறைவாக அறிவித்தல் போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டு வரி ஏய்ப்பு செய்து வந்தனர். இவ்வாறான வரி ஏய்ப்பினை எதிர்கொள்ளும் பொருட்டு, ₹ 5 கோடி என்ற நிபந்தனைக்குட்பட்ட விற்பனைத்தொகை வரம்பானது 2012-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் அரசால் நீக்கப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்

வணிகர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு குடும்ப உதவித்தொகை, மருத்துவ உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, தீ விபத்து நிவாரணத்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 31.3.2012 அன்றுள்ளவாறு 46,518 வணிகர்கள் வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். 511 உறுப்பினர்கள் ₹ 102.42 இலட்சங்கள் அளவிலான பல்வேறு உதவித்தொகைகளை வாரியத்திடமிருந்து பெற்றுள்ளனர். வாரியத்தில் உறுப்பினராக சேருவதையும், உதவித்தொகைகளைப் பெறுவதையும் எளிமையாக்கும் விதமாக, உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக ஆண்டுதோறும் ₹ 100/- செலுத்துவதில் இருந்து அரசு விலக்களித்துள்ளது. மேலும், 2006–ஆம் ஆண்டு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெறாத, தொழில்வரி உச்சவரம்புக்குக் கீழே உள்ள சிறு வணிகர்களும், உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில்



உறுப்பினர் ஆகலாம் என்றும் வழிவகை செய்துள்ளது. தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களின் விவரங்களை www.tn.gov.in/tntwb என்ற வலை தளத்தில் காணலாம்.

## 12. சமாதானத் திட்டம்

2011-2012–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, 1.11.2011 முதல் 30.4.2012 வரையிலான ஆறு மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் வகையிலான ஒரு சமாதானத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2011 –ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ஆம் நாளுக்கு முன்னதாக தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம் (அது தொடர்பான பிற சட்டங்கள் உட்பட) மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டங்களின் கீழ் வரிக்கணிப்பு செய்யப்பட்டிருக்கிற, 2006–2007 ஆம் ஆண்டு வரையிலான வரிக்கணிப்பு ஆண்டுகள் தொடர்பான வரி நிலுவைகளை தீர்த்துக் கொள்ள இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வணிகரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரி முழுவதையும் (100%) செலுத்தவும், சர்ச்சைக்குரிய வரி நிலுவையில் 40 சதவீதத்தையும் 7.5 சதவீத வட்டியுடன் சேர்த்து செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டது. தண்டத்தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டது. தண்டத்தொகையும், வட்டியும் மட்டும் நிலுவையில் இருந்தால் தண்டத் தொகையில் 10 சதவீதமும், வட்டியில் 25 சதவீதமும் மட்டும் செலுத்த வேண்டும்.

## 13. சரக்கு மற்றும் சேவை வரி

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் 2007–08–ஆம் ஆண்டிற்கான மத்திய நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்த போது 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாள் முதல் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்படுமென தெரிவித்தார். இதற்காக, மத்திய அரசோடு இணைந்து செயல்பட்டு, இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரியினை அறிமுகம் செய்திட செயல்திட்டம் ஒன்றைத் தயாரித்திட, மாநில நிதி/வரி அமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவிடம் கேட்டுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, நாடு முழுவதிலும் மதிப்புக்கூட்டு வரியினை அமல்படுத்தியதில் முக்கிய பங்கு வகித்த அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, தற்போது சரக்கு மற்றும் சேவை வரியின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் அதனை அமல்படுத்துவது குறித்தும் மாநிலங்களின் கருத்துக்கள் மற்றும் ஐயப்பாடுகளை வெளிப்படையாக எடுத்து வைப்பதற்கான ஒரு தளமாக அமைந்துள்ளது.

மக்களவையில் மார்ச் 2011–ல் நடைபெற்ற வரவு–செலவு கூட்டத் தொடரில் இந்திய அரசியலமைப்புச் சட்ட (நூற்றுப்பதினைந்தாவது திருத்தம்) மசோதா 2011, மத்திய அரசால் அறிமுகம் செய்யப்பட்டு, இம்மசோதா நிதி தொடர்பான பாரளுமன்ற நிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதாவின் பல்வேறு கூறுகளின் மீது மாநிலங்களின் கருத்துக்களைக் கோரி, நிதி தொடர்பான பாரளுமன்ற



நிலைக் குழுவின் தலைவர் கடிதம் எழுதியுள்ளார். சாதாரண மக்கள், வணிகம் மற்றும் தொழில் செய்யும் பெருமக்கள் ஆகியோருக்கு பயன் அளிப்பதாகவும், பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்றம் அளிப்பதாகவும் உள்ள வரி சீர்திருத்தம் எதுவானாலும் அது தமிழ்நாடு அரசுக்கு ஏற்புடையதாகும். அதே சமயம், அவ்வாறான வரி சீர்திருத்தம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஆக்கிரமித்திடக் கூடாது. மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள மாநில அரசுகளுக்கு, அவர்களுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பதிலும், வளர்ச்சி திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், பெரும் பொறுப்புகள் உள்ளன. விற்பனை வரியானது மாநிலங்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரே முக்கிய மற்றும் சக்தி வாய்ந்த வருவாய் ஆதாரமாகும். வரி சீர்திருத்தம் என்ற பெயரில் மாநில நிதி ஆதாரங்கள் பாதிப்படையவோ, சிதைவுபடவோ கூடாது.

அதற்கிணங்க தமிழ்நாடு அரசு, சரக்கு மற்றும் சேவை வரி குழு, சரக்கு மற்றும் சேவை வரி சர்ச்சை தீர்வு அமைப்பு, கேளிக்கைகள் வரி மற்றும் புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள் போன்ற அம்சங்கள் மீது தனது அதிருப்தியினை நிதி தொடர்பான பாரளுமன்ற நிலைக் குழுவிற்கு தெரிவித்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா மீது விவாதிப்பதற்கு முன் சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான முக்கியப் பிரச்சனைகள் மீது வெளிப்படையான ஒருமித்த கருத்து பெறுவதற்காக கலந்தாலோசிப்பு செயல்முறை தொடர்ந்து நடந்திட

உறுதி செய்யுமாறும், இந்நேர்வில் தனது தனிப்பட்ட கவனத்தினைச் செலுத்துமாறும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் **மாண்புமிகு பிரதமர்** அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

## 14. மதிப்புக் கூட்டுவரி அறிமுகம் மற்றும் மத்திய விற்பனை வரிவீதத்தில் குறைப்பு காரணமாக வருவாய் இழப்பீடு

தொடர் வரிச்சுமை ஏற்படுத்தும் இரட்டை வரிவிதிப்பு மற்றும் பல்வேறு விதமான வரிகளைத் தவிர்க்கும் பொருட்டு, மதிப்புக் கூட்டுவரி என்ற வடிவில் ஒரு பிரதான மறைமுக வரி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. குறைந்த செலவில் வரியைப் பெருக்குவதற்கும், வியாபார செயல்பாடுகளை எளிமைப்படுத்துவதற்கும் உதவுகின்ற எந்தவொரு வரி சீர்திருத்தத்தையும் தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளும் என்றாலும், மதிப்புக் கூட்டுவரியினை அறிமுகம் செய்யும் போது நிச்சயமாக வருவாய் இழப்பு ஏற்படும் என்பதனால் இவ்வரிமுறைக்கு மாறுவதற்கு தயக்கம் இருந்தது. மதிப்புக்கூட்டு வரியை அறிமுகப்படுத்துவதால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பு பற்றி தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களின் அச்சத்திற்குச் செவி சாய்த்திட்ட மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து மதிப்புக்கூட்டு வரியினால் ஏற்படக்கூடிய இழப்பினை ஈடுசெய்வதற்கான திட்டம் ஒன்றினை வகுத்தது. தமிழ்நாட்டில் 1.1.2007 முதல் மதிப்புக்கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டது. மதிப்புக்கூட்டு வரி இழப்பீட்டினை ஈடுசெய்வதற்கான திட்டத்தின்



அடிப்படையில், 2007–ஆம் ஆண்டிற்கு 75 சதவீதமும், 2008–ஆம் ஆண்டிற்கு 50 சதவீதமும் மத்திய அரசிடமிருந்து இழப்பீடாகப் பெறுவதற்கு நமது மாநிலம் தகுதி பெற்றிருந்தது. மேற்குறிப்பிட்ட இரு ஆண்டுகளுக்கும் மொத்தத்தில் ₹ 4011.80 கோடி இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசால் கோரப்பட்டது. மத்திய அரசு இழப்பீட்டுத்தொகையினை ₹ 3361.36 கோடி எனக் கணக்கிட்டு இத்தொகையினை தமிழகத்திற்கு விடுவித்துள்ளது. மீதமுள்ள தொகையான ₹ 650.44 கோடியில், 2007 மற்றும் 2008–ஆம் ஆண்டுகளுக்கான நிலுவை வரி வசூலான ₹ 924.12 கோடி மற்றும் ₹ 179.13 கோடி (தமிழ்நாடு பொது விற்பனை வரி காலத்திற்கான காலந்தாழ்த்தி கட்டப்பட்ட வரிகள்) முக்கியக் கூறுகளாகும். இந்தத் தொகையானது மதிப்புக்கூட்டு வரி காலத்தில் பெறப்பட்ட வருவாய் இலாபம் என தவறுதலாக மத்திய அரசால் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நிலுவைத் தொகையினை மத்திய அரசின் நிதி அமைச்சகத்திடமிருந்து பெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும் ஒரு பொதுச் சந்தை இயங்கிடுவது என்பது சரக்கு மற்றும் சேவை வரியின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும். ஆகையால், மாநிலங்களுக்கிடையேயான விற்பனையின் மீது மத்திய விற்பனை வரி விதித்திடுவது என்பது சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் நிர்வாகத்திற்கு பொருந்தக்கூடியதல்ல. சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்துவதற்கான செயல்திட்டத்தின் அடிப்படையில் 1.4.2007 முதல் மத்திய விற்பனை

வரிவீதம் 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும், **1.6.2008** முதல் 3 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. சரக்கு மற்றும் சேவை வரி முறை **1.4.2010** முதல் கொண்டு வரப்படும் என எதிர்ப்பார்க்கப்பட்டதற்கிணங்க, அன்றைய நாளில் மத்திய விற்பனை வரியினை முழுவதுமாக கைவிட கருதப்பட்டது. மத்திய விற்பனை வரிவீதத்தை குறைப்பதனால் மாநிலங்களுக்கு பெருமளவு வருவாய் இழப்பு ஏற்படும் என்ற சூழ்நிலையில், படிவம் 'டி' யை நீக்குதல், புகையிலை, சர்க்கரை மற்றும் துணி வகைகளுக்கு வரிவிதிக்க மாநிலங்களுக்கு அனுமதியளித்தல், தற்போது மத்திய அரசால் வரிவிதிக்கப்படும் **33** சேவைகளையும் வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படக்கூடிய **44** புதிய சேவைகளையும் கண்டறிந்து மாநிலங்களுக்கு மாற்றுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்ட முடிவு செய்யப்பட்டது. மேற்சொன்ன நடவடிக்கைகளுக்குப் பிறகும் வருவாய் இழப்பு ஏதும் இருக்குமெனில் அவ்விழப்பு சரக்கு மற்றும் சேவை வரிகள் அமல்படுத்தப்படும் வரை மத்திய அரசால் ஈடுசெய்யப்படும்.

அதன்படி, **2009-2010**-ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு, தமிழக அரசு, மத்திய அரசிடம் ₹ **4188.38** கோடி இழப்பீடு கோரியது. அதில் மத்திய அரசு, ₹ **2577.58** கோடி மட்டுமே இழப்பீடாக அளித்துள்ளது. திட்டமிட்டபடி, **1.4.2010**–லிருந்து சரக்கு மற்றும் சேவை வரிகள் அறிமுகப்படுத்தப்படாததால் **2010–11**–ஆம் ஆண்டிற்கும் இழப்பீடு அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டது. எனினும், மதிப்புக்கூட்டு



வரியினை அந்த ஆண்டில் 4 சதவீதத்திலிருந்து **5** சதவீதமாக உயர்த்தாததைக் காரணமாகக் காட்டி, தமிழ்நாடு அரசு இழப்பீடாகக் கோரிய ₹ **2309.34** கோடியில் சொற்பத் தொகையாக ₹ **58.92** கோடி மட்டுமே மத்திய அரசு அளித்துள்ளது. மத்திய விற்பனை வரி இழப்பீட்டைக் கணக்கிடும் வழிகாட்டு நெறிமுறைகள் எதிலும் குறிப்பிடப்படாத, ஏற்றுக்கொள்ள இயலாத மேற்கண்ட புதிய நிபந்தனையை, அனைத்து மாநிலங்களும், அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் மூலமாக கடுமையாக எதிர்த்து வருகின்றன. மத்திய விற்பனை வரி குறைப்பினால் மாநிலங்கள் தொடர்ந்து வருவாய் இழப்பினை எதிர்கொண்டு வரும் நிலையிலும், சரக்கு மற்றும் சேவை வரி செயல்படுத்தப்படாத நிலையிலும், இப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் **2011–2012**–ஆம் ஆண்டு முதல் மத்திய விற்பனை வரி இழப்பீடு வழங்கப்படாது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு அரசு, அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் மூலமாகவும் தனியாகவும் தொடர்ந்து இழப்பீட்டுத் தொகை குறித்து வலியுறுத்தி வரும் நிலையில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களும் **மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு** இது தொடர்பாக பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி தனியாகக் கடிதம் எழுதியுள்ளார்கள்:–

(i) மத்திய விற்பனை வரி இழப்பீட்டை நிறுத்துவதற்கு சரக்கு மற்றும் சேவை வரியை **1.4.2010** முதல் அமல்படுத்தப்படாததைக் காரணமாக

எடுத்துக்கொள்ளக்கூடாது. மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு கணிசமானதாகவும், நிரந்தரமானதாகவும் இருப்பதால், சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்படும் வரை தொடர்ந்து மத்திய அரசு இழப்பீடு அளிக்க வேண்டும்.

(ii) 2010–11–ஆம் ஆண்டுக்கான மத்திய விற்பனை வரி இழப்பீட்டுத் தொகை வழங்குவதுடன் மதிப்புக் கூட்டுவரி வீதத்தை 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்துவதை தொடர்பு படுத்தக்கூடாது. ஏனெனில், இழப்பீடு தொடர்பான மூல வழிகாட்டுதல் நெறிமுறைகளில் இதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை. மதிப்பு கூட்டுவரி சீரமைப்பிற்கும் மத்திய விற்பனை வரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

(iii) சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்த மேலும் காலதாமதமாகும்பட்சத்தில் மத்திய விற்பனை வரியை மீண்டும் முன்பிருந்தவாறு 4 சதவீதமாக்க வேண்டும்.

## 15. தகவல் தொழில்நுட்பம்

1988–ஆம் ஆண்டிலேயே வணிகவரித் துறையானது தனக்கென ஒரு தகவல் தொகுப்பு மையத்தினை அமைத்து, தமிழகத்திலுள்ள பிற அரசுத் துறைகளுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறது. மாநிலம் முழுவதிலும் இருந்து பெறப்படும் மாதாந்திர நமூனாக்கள் இத்தகவல் தொகுப்பு மையத்தில் பதிவு



செய்யப்பட்டு, தகவல் பராமரிப்பு முறையின் அறிக்கையினை (MIS Reports) தயார் செய்வதற்கு உதவி புரிகிறது. வரி நிர்வாக கொள்கைகளில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு இந்த தகவல் பராமரிப்பு முறையின் அறிக்கைகள் பயன்படுத்தப்படுகிறது.

துறையின் தகவல் தொழில்நுட்பத்திறனின் முன்னேற்றம் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும், 2003–ஆம் ஆண்டு முக்கிய நடவடிக்கையாக துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டு, அவை சென்னையில் அமைக்கப்பட்ட மைய சேவையகத்துடன் (Server) இணைக்கப்பட்டன.

தற்போது, வணிகவரித்துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் தேவையான கணினிகள், அச்சுப்பொறி மற்றும் பல்பயன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. துறையின் அலுவலகங்கள் அமைந்துள்ள 215 இடங்களும் அந்தந்த அலுவலகங்களுக்கு அருகாமையிலுள்ள தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இருப்பு முனையின் (Point of Presence) மூலம் 2 Mbps வழித்தடங்கள் மூலம் இணைக்கப்பட்டு, துறைக்கான பெரியதொரு பெரும்பரப்பு வலையமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இத்துறைக்கென www.tnvat.gov.in என்ற சொந்த வலை தளம் ஒன்று உருவாக்கப்பட்டு, இதன் மூலம் புதிய பதிவுக்கு விண்ணப்பித்தல், மின்னணு வழி மாதாந்திர நமூனாக்கள் சமர்ப்பித்தல், மின்னணு வழி

வரி செலுத்துதல், சோதனைச்சாவடிகளில் விரைவு வழி அனுமதி வழங்குதல், மின்னணு வழியாக கடப்புச்சீட்டு வழங்குதல், சட்டப்படியான படிவங்களை மின்னணு வழியாகக் கோருதல், ஏற்றுமதியாளர்கள் மின்னணு வழியாக வரி திருப்புகை கோருதல் போன்ற துறையால் அளிக்கப்படும் மின்னணு வழி சேவைகளை வணிகப் பெருமக்கள் எளிதாகப் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. வரிவிதிப்பு வட்டங்கள், சோதனைச் சாவடிகள், செயலாக்கப்பிரிவு, மேல்முறையீட்டு பிரிவு போன்றவற்றிற்கான கணினி மென்பொருட்களை துறை அலுவலர்கள் எளிதில் பயன்படுத்தும்பொருட்டு www.tnct.gov.in என்ற உள் வலை தளம் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக உள் வலை தளம் மூலம் வழங்கப்பட்டு வரும் சில வசதிகளின் விவரம் பின்வருமாறு:–

- மாநில அளவிலிருந்து வட்ட அளவு வரையில் பல்வேறு சட்டங்களின் கீழ் பெறப்படும் வரி வசூல் விவரங்களை நிகழ் நிலையில் பெறுதல்
- துறையின் பல்வேறு அலுவலகங்களின் பணித்திறன் குறித்த அறிக்கைகளைப் பெறுதல்
- நமூனாக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரங்கள், நமூனாக்கள் தணிக்கை செய்யப்பட்ட விவரங்கள், அலுவலகங்களின் கணினிகளில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட உள்ளீடு மற்றும் வெளியீடு குறித்த விவரங்கள் மற்றும் பிற தகவல்களை ஆய்வு செய்தல் போன்ற தகவல் பராமரிப்பு முறையின் அறிக்கைகளைப் பெறுதல்



- வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினைப் பெற்ற விவரங்களை மின்னணு வழி சரிபார்த்தல்
- தவறாகக் கோரப்படும் உள்ளீட்டு வரி வரவு மீதான தாக்கீதுகளை மின்னணு வழி அனுப்புதல்
- வணிகர்களால் தாக்கல் செய்யப்பட்ட மாதாந்திர நமூனாக்களில் கொடுக்கப்பட்ட விவரங்களை சோதனைச்சாவடிகளை கடந்து செல்லும் சரக்கு விவரங்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்க ஏதுவாக வரிவிதிப்பு மற்றும் சோதனைச் சாவடிகளுக்கான மென்பொருட்களை ஒருங்கிணைத்தல்

கடந்த சில மாதங்களாக ஒருங்கிணைந்த முழுமையான கணினிமயமாக்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல் மற்றும் வணிகர்கள் மின்னணு வழி வரி செலுத்தும் வசதியினை மேம்படுத்துதல் போன்ற பெருமுயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

## (அ) முழுமையான கணினிமயமாக்கல் திட்டம்

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் அறிவித்தவாறு, வணிகவரித்துறையானது அதன் அடுத்த கட்ட மின் ஆளுமையினை நடைமுறைப்படுத்த, முழுமையான கணினிமயமாக்கும் திட்டத்தினை செயல்படுத்தவுள்ளது. அதற்கிணங்க, இத்திட்டத்தினை வடிவமைக்கவும், செயல்படுத்தவும் துறையின் திட்ட ஆலோசகரான திருவாளர்கள் அக்செஞ்சர் நிறுவனத்தின் உதவியுடன் ஒரு விரிவான

திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

(i) துறை அலுவலகங்கள் அமைந்துள்ள அனைத்து இடங்களிலும் தகவல் தொழில் நுட்ப அடிப்படை வசதிகளை கொள்முதல் செய்தல், நிறுவுதல், நடைமுறைபடுத்துதல் மற்றும் பராமரித்தல்

(ii) மின்னணு சேவைகளை வரி செலுத்துபவர்களுக்கு வழங்குவதற்கான மைய வலைதளம் சார்ந்த மென்பொருள் மற்றும் துறைக்கென ஆற்றல் வாய்ந்த வலை தளத்தினை வடிவமைத்தல், நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் மற்றும் துறையால் நிர்வகிக்கப்பட்டு வரும் பல்வேறு சட்டங்களின் முக்கிய வரி செயல்பாடுகளை கணினிமயமாக்கல்

(iii) தகவல் பராமரிப்பு முறையின் விவரங்கள் மற்றும் வணிக நுண்ணறிவு

(iv) பணியாளர்களும், வரி செலுத்துவோரும் தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய சேவை மையம் உருவாக்குதல்

(v) புதிதாக வடிவமைக்கப்படும் செயல்முறைகள் மற்றும் புதிய மென்பொருள் குறித்து தெளிவுபெற அவ்வப்போது பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

(vi) புதிய வழிமுறையினை பயன்படுத்துவது குறித்து தெளிவுபடுத்துதல் மற்றும் வரி செலுத்துவோருக்கு பயிற்சி அளித்தல்

(vii) இந்த முழுமையான வழிமுறையினை மூன்றாம் நபர் தணிக்கை செய்து சான்றளித்தல்

(viii) சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்திற்கு மாறும் பொழுது, மென்பொருளினை மாற்றி வடிவமைத்தல்/தரம் உயர்த்துதல், தேவை ஏற்படும் போதெல்லாம் ஏற்கெனவே உள்ள புள்ளி விவரங்கள் மற்றும் பிற விவரங்களை உட்புகுத்துதல்

(ix) வணிகத் தொடர்ச்சி மற்றும் பேரிடர் மீட்பு

இந்த முழுமையான கணினிமயமாக்கல் திட்டத்தினை 5 ஆண்டு காலகட்டத்தில் செயல்படுத்த ஆகும் செலவினமான ₹ 230.96 கோடிக்கு அரசாணை (நிலை) எண்.13, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 18.1.2012-ல் நிதி மற்றும் நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதை தொடர்ந்து கண்காணிக்க தலைமைச் செயலாளர் தலைமையிலான ஒரு அதிகாரமளிக்கப்பட்ட குழுவில் முதன்மைச் செயலாளர்-நிதி, செயலாளர்–தகவல் தொழில்நுட்பவியல், செயலாளர்–வணிகவரி மற்றும்

பதிவுத் துறை, வணிகவரி ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் அலுவலகத்தின் இணை ஆணையர் (கணினி) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கென அமைக்கப்பட வேண்டிய ஒப்பந்தப் படிவமானது (Request for Proposal) தயார் நிலையில் உள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்படும்.

### (ஆ) மின்னணு வழி வரி செலுத்துதல் (e-Payment)

வணிகவரித் துறையின் இணையதளமான www.tnvat.gov.in மூலம் மின்னணு முறையில் வணிகர்கள் வரி செலுத்துவதற்கு அக்டோபர் 2009 முதல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடக்கத்தில், இவ்வசதியானது பாரத ஸ்டேட் வங்கி மூலமாக மட்டுமே அளிக்கப்பட்டது. பின்னர் பரோடா வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் கனரா வங்கி போன்ற வங்கிகளிலும் இவ்வசதியினை அளிக்க வழிவகை செய்யப்பட்டன. இந்த மின்னணு வரி செலுத்தும் முறையானது, வரி வருவாயினை அரசுக்கு உடனுக்குடன் அரசுக் கணக்கில் வரவு வைத்தல், செலுத்தப்பட்ட வரி விவரங்களை வங்கிகளுடன் எளிதாக ஒப்பிட்டுப்பார்த்தல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்வதுடன் வணிகர்கள் துறை அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளும் தேவையைக் குறைத்து, வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலைப் பெற்று, பஞ்சாப் நேஷனல் வங்கி, இந்தியன் யூனியன் வங்கி, ஐசிஐசிஐ வங்கி,



எச்டிஎப்சி வங்கி, ஆக்சிஸ் வங்கி, இந்திய யுனைடட் வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, ஐடிபிஐ வங்கி மற்றும் யூகோ வங்கி ஆகிய 9 வங்கிகள் மூலம் மின்னணு வழி வரி செலுத்தும் வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 16. சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பொதுவாக தனியார் கட்டடங்கள் அரசு துறை அலுவலகத்தின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்படாததால் இக்கட்டடங்களில் இயங்கிவரும் அலுவலகங்களை நாடி வரும் வணிகர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் பணியாளர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, இந்த நிலையினை களைய, அரசு ₹ 20.15 கோடி செலவில் பின்வரும் 34 அலுவலகங்களுக்கு 15 கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ளது:

| வ. எண் | கோட்டம் | அலுவலகங்களின் விவரம் | ஒப்பளிக்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | திருவண்ணா–மலை | 1. துணை ஆணையர் (வவ), திருவண்ணாமலை<br>2. உதவி ஆணையர் (வவ), திருவண்ணாமலை-I<br>3. உதவி ஆணையர் (வவ), திருவண்ணாமலை-II<br>4. வணிகவரி அலுவலர் (செயலாக்கம்), திருவண்ணாமலை | 143.99 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 1. உதவி ஆணையர் ( வ.வ) மயிலாடுதுறை – 1.<br>2. வணிகவரி அலுவலர் மயிலாடுதுறை – 2. | 203.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. | வணிகவரி அலுவலர், (செயலாக்கம்) மயிலாடுதுறை. | |
| | | 4. | வணிகவரி அலுவலர், லால்குடி | 19.00 |
| | | 5. | துணை ஆணையர் (வ.வ), புதுக்கோட்டை | 165.00 |
| | | 6. | உதவி ஆணையர் (வ.வ), புதுக்கோட்டை–I | |
| | | 7. | வணிகவரி அலுவலர், புதுக்கோட்டை–II | |
| | | 8. | வணிகவரி அலுவலர், (செயலாக்கம்), புதுக்கோட்டை | |
| | | 9. | வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சி | 250.00 |
| | | 10. | துணை வணிகவரி அலுவலர், நன்னிலம் | 35.00 |
| | | 11. | உதவி ஆணையர் (வ.வ), ஸ்ரீரங்கம். | 80.00 |
| 3. | **மதுரை** | 1. | துணை ஆணையர் (வ.வ), சிவகங்கை | 138.60 |
| | | 2. | உதவி ஆணையர் (வ.வ), சிவகங்கை | |
| | | 3. | வணிகவரி அலுவலர் (செயலாக்கம்), சிவகங்கை | |
| | | 4. | உதவி ஆணையர் (வ.வ), திண்டுக்கல் | 33.88 |
| 4. | **சேலம்** | 1. | துணை ஆணையர் (வ.வ), சித்தோடு | 155.10 |
| | | 2. | உதவி ஆணையர் (வ.வ), பெரிய அக்ரஉறாரம் | |
| | | 3. | மேல்முறையீட்டு உதவி ஆணையர் (வ.வ) | |
| | | 4. | துறைப்பிரதிநிதி அலுவலகம், ஈரோடு | |



| | | | | |
|---|---|---|---|---|
| 5. | **கோயம்புத்தூர்** | 1. | துணை வணிகவரி அலுவலர், வால்பாறை | 235.00 |
| | | 2. | அரசு அலுவலர் குடியிருப்பு, வால்பாறை | |
| | | 3. | உதவி ஆணையர் (வ.வ), பீளமேடு (வடக்கு) | 293.70 |
| | | 4. | உதவி ஆணையர் (வ.வ), பீளமேடு (தெற்கு) | |
| | | 5. | உதவி ஆணையர் (வ.வ), ஆவாரம்பாளையம் | |
| | | 6. | உதவி ஆணையர் (வ.வ), துடியலூர் | |
| | | 7. | உதவி ஆணையர் (வ.வ), வேலாண்டிபாளையம் | |
| | | 8. | உதவி ஆணையர் (வ.வ), மேட்டுப்பாளையம் | 88.00 |
| 6. | **திருநெல்வேலி** | | வணிகவரி அலுவலர், கோவில்பட்டி | 25.00 |
| 7. | **வேலூர்** | 1. | வணிகவரி அலுவலர், பண்ருட்டி (நகரம்) | 149.60 |
| | | 2. | துணை வணிகவரி அலுவலர், பண்ருட்டி (ஊரகம்) | |
| | **மொத்தம்** | | **34 அலுவலகங்கள்** | **2015.37** |

## 17. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

வணிகப்பெருமக்களிடையே வழக்கமான தொடர்புகள் கொண்டிருக்கும் வணிகவரித்துறை போன்ற துறைக்கு, அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பது இன்றியமையாததாகும். இக்குறிக்கோளை நோக்கி, 2005-ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட கோரிக்கை எதுவாயினும் அதற்கு இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து

வருகிறது. 2011-ஆம் ஆண்டு, அதாவது 1.1.2011 முதல் 31.12.2011 வரை, இத்துறையில் 2005-ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 255 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு முறையாக அனுப்பப்பட்டுள்ளன.

## 18. 2012–2013–ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டம்

நடப்பு நிதியாண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் வணிகவரித்துறைக்கு பின்வரும் புதிய திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வணிகவரி ஆணையர் அலுவலக உபயோகத்திற்கு 1 தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் (150 லிட்டர்) மற்றும் 2 நிகரி இயந்திரம் வாங்குதல் | 1.05 |
| 2. | தணிக்கைச்சாவடி பணியாளர்களுக்கு மழைக்கோட்டு, கை ஒளி விளக்கு மற்றும் வேலூர் (செய) கோட்டத்தில் இயங்கும் வணிகவரித் துறைக்கு குடிநீர் குளிர்விக்கும் கருவி வாங்குதல் | 1.35 |
| 3. | வேலூர் (2) எண்ணிக்கை மற்றும் திருச்சி (1) எண்ணிக்கை வணிகவரி கோட்டங்களுக்கு மின் உற்பத்தி சாதனங்கள் (63 கி.வா.) மற்றும் திருநெல்வேலி வணிகவரி கோட்டத்திற்கு மின் உற்பத்தி சாதனம் (30 கி.வா.) வாங்குதல் | 13.95 |
| 4. | வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு கோப்புகள் அடுக்கும் ஸ்டீல் அலமாரிகள் 6 எண்ணிக்கையும் கோத்ரெஜ் கம்பேக்டர் இரும்பு அடுக்குகள் 10 எண்ணிக்கையும் வாங்குதல். | 4.60 |
| 5. | வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு நகல் எடுக்கும் இயந்திரம், நிகரி இயந்திரம் மற்றும் தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் (150 லிட்டர்) வாங்குதல். | 10.25 |
| 6. | வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு 35 லேசர் அச்சுப்பொறி மற்றும் 5 கி.வா. இடையறாத மின் வழங்கும் இயந்திரம் 3 வாங்குதல். | 9.30 |
| 7. | ஒரு iPad – வாங்குதல். | 0.56 |
| | **மொத்தம்** | **41.06** |



**சி.வி. சண்முகம்,**
**வணிகவரி மற்றும் பதிவு,**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.**